
# முஸ்லிம்களின் கோவிட் - 19 கையேடு.

கோவிட் 19 நோய் தொற்றை கையாளும் முறை தொடர்பான ஓர் இஸ்லாமிய வழிகாட்டி.

மூத்த இஸ்லாமிய அறிஞர்கள் மற்றும் மருத்துவர்களின் வழிகாட்டலில் வெளியிடப்பட்டது.







# உள்ளடக்கம்


## அறிமுகம்

3 அறிமுகம்

4 பொற்காலம்

## தடுப்பு நடவடிக்கைகள்

5-7 ஆன்மீக பாதுகாப்பு

8 நடைமுறைக் கேற்ற தற்காப்பு நடவடிக்கைகள்

## நோய் அறிகுறிகள் வெளிப்படுதல்

9 நோய் அறிகுறிகள் வெளிப்படும் போது கடைப்பிடிக்க வேண்டியவைகள்

10 நல்லதை எதிர்ப்பார்த்தலும் அல்லாஹ்வுடன் தொடர்பு வைத்தலும்

11 நோயின் போது ஓதவேண்டிய நபிவழி துஆக்கள்

12 நோய் அறிகுறிகள் உள்ளவர்களுக்கு உதவுதல்

## நோய் அறிகுறிகள் தீவிரமடையும் போது

12 மருத்துவமனைக்கு செல்லும் முன்

12 மூன்று முக்கிய நடவடிக்கைகள்

13-14 முழுமையான பாவமன்னிப்பு கோரல்

15-16 நோயாளியான நிலையில் தொழுதல்

17-19 அல்லாஹ்வை பற்றி நல்லெண்ணம் கொள்வதற்கான வழிமுறைகள்

## மருத்துவமனையில்

20 மருத்துவமனையில் செய்யவேண்டியவைகள்

20 நீங்கள் நோயிலிருந்து குணமடைந்தால்

20 நோய் தீவிரமான தருவாயில்

20 தனிமையாக இருத்தல்

21 லாஇலாஹ இல்ல ல்லாஹ் வின் முக்கியத்துவம்

## மரணத்தை கையாளுவது

22-24 இழப்பு செய்தியை செவியுறும் போது மேற்கொள்ளவேண்டிய முதல் நடவடிக்கை

25 இழப்பை கையாளுவதற்கு மற்றவர்களுக்கு உதவுதல்

## ஜனாஸாவின் கடமைகள்

26 இறந்தோரை குளிப்பாட்டல்

26 கபனிடல்

27-28 ஜனாஸா தொழுகை

29 அடக்கம் செய்தல்

29 அடக்கம் செய்த பின்னர்

## இறுதி சடங்கின் பின்னர்

30 மையவாடியை தரிசித்தல்

30 முடிவுரை



இந்த கையேடானது ஸ்பிரிஷுவல் அன்டிடோட் பப்ளிகேஷனால் வெளியிடப்பட்டது

(முன்னர் தஸ்கியா பப்ளிகேஷன் என அறியப்பட்டது)

WWW.SPIRITUALANTIDOTE.COM | info@spiritualantidote.com



COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS

# அறிமுகம்

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையவனும் ஆகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்

எல்லா புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே. அவனுடைய உதவி, அருள் மற்றும் வழிகாட்டுதல்களை நாம் வேண்டி நிற்கிறோம். தூதர் முஹம்மது நபியவர்களுக்கு அல்லாஹ் அருள் புரிவானாக, அவர்களது தகுதியை உயர்த்துவானாக, அவர்களுக்கு மதிப்பளிப்பானாக, மேலும் அவர்களைப் பாதுகாப்பானாக.

தற்போதைய கொரோனா வைரஸ் தொற்றானது உலகம் முழுவதும் வேகமாக பரவி, மக்களின் இயல்பு வாழ்க்கையை முற்றிலுமாக பாதிப்படையச்செய்துள்ளது. இதில் முஸ்லிம் சமூகமும் பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த கையேட்டை எழுதுவதன் மூலம், சரியான இஸ்லாமிய கொள்கை மற்றும் அறிவின் அடிப்படையாகக் கொண்ட வழிகாட்டல்களை வழங்கி, அல்லாஹ்வின் அருளைக்கொண்டு நம் சமூகத்திற்கு நம்பிக்கையைக் கொண்டுவர விரும்புகிறோம்.

இந்த கையேட்டை எழுதுவதன் நோக்கங்கள்:

- இந்த நேரத்தில் நமது ஈமானையும் அல்லாஹ்வுடனான நமது ஆன்மீக தொடர்பையும் பலப்படுத்துதல்.
- நமக்கும் நம் அன்புக்குறியவர்களுக்கும் நிகழக் கூடிய எல்லா நிகழ்வுகளையும் சிறந்த முறையில் எதிர்கொள்ள நாம் தயாராக இருப்பதை உறுதிசெய்தல்.

இந்த நேரத்தை அல்லாஹ்வுடன் நெருக்கமாகும் தருனமாக மாற்றுவானாக. நம்மையும், நம்முடைய அன்புக்குரியவர்களையும், சமூகத்தையும் அல்லாஹ் அனைத்து விதமான தீங்குகளிலிருந்தும் பாதுகாப்பானாக. இறுதியாக நாம், காலம்சென்ற அனைவரையும் மன்னித்து அவர்களுக்கு இரக்கம் காட்டும்படி அவனிடம் வேண்டுகிறோம்

COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS

# பொற்காலம்




**இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்**
**"கொள்ளை நோய் * பரவிய இடத்தில் இருப்பவர் எவராயினும் அவர் பொறுமையுடனும், இறைவெகுமதியை விரும்பியவராகவும் அல்லாஹ் நமக்கு எழுதியுள்ள (விதிப்படி நம்மைப் பீடிக்கவிருப்ப)தைத் தவிர வேறெதுவும் நம்மைப் பீடிக்காது என்னும் நம்பிக்கை கொண்டவராகவும் தன் ஊரிலேயே தங்கியிருப்பாராயின் இறைவழியில் உயிர்த் தியாகம் செய்தவர் பெறுவதைப் போன்ற நற்பலன் அவருக்கும் நிச்சயம் கிடைக்கும்' என்று கூறினார்கள்"**

[ஸஹீஹுல் புகாரி(3474)]

* பெரும் பரவலாக இருக்கின்ற தொற்றுநோய்களும், பிளேக் நோய்க்கான சட்டவழிகாட்டல்களை பெறும் என பல அறிஞர்கள் கூறியுள்ளனர். அல்லாஹ் தனது தாராள தன்மையால், பிளேக் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிடைக்கும் வெகுமதியை போன்ற வெகுமதியை, இந்த வழிமுறைகளை பின்பற்றுபவர்களுக்கும் அளிப்பான் என்று நம்புகிறோம்.

## இப் பெறுமதியான வெகுமதிகளைப் பெற ஒருவர்:



**1. அந்த இடத்திலே தங்கி இருத்தல்.**

**2.பொறுமையாக இருத்தல்.**

**3.அல்லாஹ்விடமிருந்து வெகுமதியைத் தேடுதல்.**

**4. அல்லாஹ்வின் விதியை தவிர வேறு எதுவும் ஏற்படாது என்று நம்புதல்.**

## இந்த ஹதீஸ் மூன்று சாராரை குறிப்பிடுகிறது:


நோயால் இறக்கும் நபர்


நோயிலிருந்து குணமடைபவர்


நோயால் பாதிக்கப்படாத நபர்

[ஃபத்ஹுல் பாரி (1/538)]]

COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS

# தடுப்பு நடவடிக்கைகள்
## ஆன்மீக பாதுகாப்பு

### உரிய நேரத்தில் ஃபஜ்ர் தொழுகையை நிறைவேற்றல்.

நபி ﷺ கூறினார்கள்: "யார் ஃபஜ்ர் தொழுகையை நிறைவேற்றுகிறாறோ அவர் அல்லாஹ்வின் பாதுகாப்பில் இருக்கிறார்கள்."

[சஹீஹ் முஸ்லிம்]

### ழுஹா தொழுகையை நிறைவேற்றல்.

அல்லாஹ் கூறுகிறான்: "ஆதாமின் மகனே: நாளின் ஆரம்பத்தில் எனக்காக நான்கு ரக்அத் (ழுஹா தொழுகை) நிறைவேற்று; நாளின் பிற்பகுதிக்கு நான் உமக்கு போதுமானதாக இருப்பேன். "

[அத்-திர்மிதி (475) ஆல்-சியாரில் ஆத்-தஹாபியால் உறுதிசெய்யப்பட்டது. (8/323)]

குறிப்பு: ழுஹா தொழுகைக்கான நேரம்,சூரிய உதயத்திலிருந்து ஆரம்பித்து ழுஹர் நேரத்துக்கு முன்னதாக *10* நிமிடங்களில் முடிவடைகிறது.இது இரண்டு ரக்ஆத்களாக தொழப்படும்.

### வீட்டிலிருந்து வெளியேரும் போது ஓதவேண்டிய நபிவழி துஆ

بِسْمِ اللَّهِ تَوَكَّلْتُ عَلَى اللَّهِ،وَلَا حَوْلَ وَلَا قُوَّةَ إِلَّا بِاللَّهِ

பிஸ்மில்லாஹி தவக்'கல்து 'அலல்லாஹ், வ லா ஹவ்ல வ லா குவ்வத இல்லா பில்லாஹ்

அல்லாஹ்வின்பெயரைக்கொண்டு(வெளியேறுகிறேன்), நான் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்கிறேன், அவனையே நம்பியிருக்கிறேன், அல்லாஹ்வின் உதவியின்றி (நன்மை செய்வதற்கோ, தீமையிலிருந்து தப்புவதற்கோ) எவ்வித சக்தியும்கிடையாது

"இந்த துஆவை (பிரார்த்தனை) யார் செய்கிறாரோ, அவருக்கு , 'உனக்கு நேர்வழி கிடைத்து விட்டது. உனக்கு போதுமான அளவு கொடுக்கப்பட்டு விட்டது( உன் தேவைகள் கவனத்தில்கொள்ளப்பட்டுள்ளது ), நீங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளீர்கள்' என்று கூறப்படும், மேலும் ஷைத்தான் அவனை விட்டும் தூரமாகி விடுகிறான்."

[அபூதாவூத் (5065) மற்றும் ஸாத் அல் - மஆத் (2/335) இல் இப்னுல் கையிம் உறுதிப்படுத்தியுள்ளார்.]

### அருட்கொடைகளை பாதுகாப்பதற்கான நபிவழி துஆ.

اللَّهُمَّ إِنِّي أَعُوْذُ بِكَ مِنْ زَوَالِ نِعْمَتِكَ ، وَتَحَوُّلِ عَافِيَتِكَ ، وَفُجَاءَةِ نِقْمَتِكَ

وَجَمِيعِ سَخَطِكَ

அல்லாஹும்ம இன்னி அவுது பிக மின் ஸ(z)வாலி நிஃமதிக வதஹவ்வுலி ஆஃ(f)பியதிக வஃபுஜாஅதி நிக்மதிக்க வஜமீஇ ஸஹதிக

யா அல்லாஹ், உனது அருள் நீங்குவதை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். நீ அருளிய பாதுகாப்பு மற்றும் நல் வாழ்வு நீங்கி துன்பம் மற்றும் நோய் ஏற்படுவதை விட்டும் பாதுகாவல் தேடுகிறேன். உன் தண்டனை திடீரென ஏற்படுவதை விட்டும் உன் அதிருப்தியைஏற்படுத்தக்கூடிய அனைத்து விடயங்களை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.

[ ஸஹீஹ் முஸ்லிம் (2739)]

# தடுப்பு நடவடிக்கைகள்
## ஆன்மீக பாதுகாப்பு

### நோய்களிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான நபி வழி துஆ

اللّٰهُمَّ إِنِّي أَعُوْذُ بِكَ مِنَ الْبَرَصِ وَالْجُنُونِ وَالْجُذَامِ وَمِنْ سَيِّئِ الْأَسْقَامِ

அல்லாஹும்ம இன்னி அவுது பிக மினல் பரஸி வல் ஜுனூனி
வல் ஜுதாமி வ மின் ஸய்யி யில் அஸ்காம்.

யா அல்லாஹ், உன்னிடம் வெண்குஷ்டம், பைத்தியம், தொழுநோய் மற்றும் பிற கொடிய நோய்கள் அனைத்தையும் விட்டும் பாதுகாப்பு தேடுகிறேன்.

[அபூதாவூத்(1554) மற்றும்அல் - அத்காரில் (பக்கம். 483)இமாம் நவவியால் உறுதிப்படுத்தப்பட்டது ]

### சோதனைகளிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான நபி வழி துஆ

اللّٰهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ جَهْدِ الْبَلَاءِ، وَدَرَكِ الشَّقَاءِ، وَسُوْءِ الْقَضَاءِ، وشَمَاتَةِ الْأَعْدَاءِ

அல்லாஹும்ம இன்னி அவுது மிக மின்ஜஹ்தில் பலாஇ வதரகிஷ்
ஷகாஇ வஸுஇல் கதாஇ வ ஷமதாதில் அஃதாஃ

யா அல்லாஹ், உன்னிடம் சோதனைகளால் ஏற்படும் கஷ்டங்களை விட்டும் பாதுகாப்பு தேடுகிறேன். அழிவு அல்லது துன்பம் ஆட்கொள்வதை விட்டும், எதிர் மறையான முடிவுகளிலிருந்தும் மற்றும் எதிரிகளின் தீங்கின் மூலம் எதிரிகள் மகிழ்ச்சி அடைவதை விட்டு பாதுகாப்பு தேடுகிறேன்

[ஸஹீஹ் அல் புஹாரி (6347)]

### யூனுஸ் நபியின் துஆ

لَا إِلٰهَ إِلَّا أَنْتَ سُبْحَانَكَ إِنِّي كُنْتُ مِنَ الظَّالِمِينَ

லாஇலாஹ இல்லா அன்த்த சுப்ஹானக இன்னி குன்து மினல்ழாலிமீன்

உன்னை தவிர வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை. நீ மிகவும் தூய்மையானவன், நிச்சயமாக
நான் அநியாயக்காரனில் ஒருவனாகி விட்டேன்.

நபி ﷺ கூறினார்கள் "எவரொருவர் ஏதாவது ஒருவிடயத்துக்காக இந்த துஆவை கேட்பாராயின் அவரின் பிரார்த்தனைக்கு அல்லாஹ் பதில் அளிப்பான்".

[சூரா அல் அன்பியா:87] மற்றும் [அத்-திர்மிதி(3505) மற்றும் அல்-ஃபுதுஹாத் அர்- ரப்பானிய்யாஹ் (4/11) இல் இப்னு ஹஜரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.]

# தடுப்பு நடவடிக்கைகள்

## ஆன்மீக பாதுகாப்பு

### காலை மற்றும் மாலை ஓதும் நபிவழி துஆக்கள்.

காலையில் இறைநினைவுக்கான நேரம் பஜ்ரிலிருந்து சூரிய உதயமாகும் வரையிலாகும். மேலும் மாலையில் இறைநினைவுக்கான நேரம் அஸரிலிருந்து மஃரிப் வரையிலாகும்.

بِسْمِ اللّٰهِ الَّذِي لَا يَضُرُّ مَعَ اسْمِهِ شَيْءٌ فِي الْأَرْضِ وَلَا فِي السَّمَاءِ وَهُوَ السَّمِيعُ الْعَلِيْمُ

பிஸ்மில்லாஹில்லதி லா யழுர்ரு ம அஸ்மஹி ஷைஉன் பி(f) ல் அர்ழிவலா பி(f) ஸ் ஸமாஇ வஹுவஸ்ஸமீஉல் அலீம்.

அல்லாஹ்வின் பெயரால், அவனின் பெயர் கூறப்படுமிடத்து, பூமியிலோ வானத்திலோ எந்தவொன்றும் தீங்கு விளைவிக்கமுடியாது, அவனே யாவற்றையும் கேட்பவனும் அறிந்தவனுமாவான்.

எவரொருவர் இதை காலையிலும் மாலையிலும் மூன்று முறை ஓதுகிறாறோ அவருக்கு எந்த தீங்கும் நேராது.

[அத்-திர்மிதி (3388) மேலும் அவரால் உறுதிப்படுத்தப்பட்டது]

اللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ الْعَافِيَةَ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ، اَللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ الْعَفْوَ وَالْعَافِيَةَ فِي دِينِي وَدُنْيَايَ وَأَهْلِي، وَمَالِي، اَللّٰهُمَّ اسْتُرْ عَوْرَاتِي،وَآمِنْ رَوْعَاتِي،اَللّٰهُمَّ احْفَظْنِي مِنْ بَيْنِ يَدَيَّ، وَمِنْ خَلْفِي، وَعَنْ يَمِينِي،وَعَنْ شِمَالِي،وَمِنْ فَوْقِي، وَأَعُوذُ بِعَظَمَتِكَ أَنْ أُغْتَالَ مِنْ تَحْتِي

அல்லாஹும்ம இன்னி அஸ் அலுகல் ஆஃபி(f) யத பி( f)த்துன்யா வல் ஆஹிரஹ்,அல்லாஹும்ம இன்னி அஸ்அலுகல் அப்( f) வ வல் ஆபி(f)யத பீ(f) தீனீ வ துன்யாய வ அஹ்லி, வ மாலி, அல்லாஹும்மஸ்துர் அவ்ராதி வஆமின் ரவ்ஆதி, அல்லாஹும்மஹ்ப( f)ழ்னி மின் பைனி யதைய்ய, வமின் ஹல்பி( f), வஅன் யமீனி, வஅன் ஷிமாலி, வமின் ப(f)வ்கி, வஅஊது பி அழ்மதிக அன் உஃதால மின் தஹ்தி

யா அல்லாஹ், நான் உன்னிடம் இம்மையிலும் மறுமையிலும் பாதுகாப்பு, காவல், ஆரோக்கியத்தை வேண்டுகிறேன். யா அல்லாஹ், என் குறைகளை மன்னித்து விடுவாயாக. என் தீனில் என் உலக விவகாரங்களில் என் குடும்ப விடயங்களில் மற்றும் என் சொத்தில் மன்னிப்பையும் பாதுகாப்பு, காவல் மற்றும் ஆரோக்கியத்தையும் வேண்டுகிறேன். யா அல்லாஹ் என் தவறுகளையும் என் குறைபாடுகளையும் மறைத்து விடுவாயாக, என்னை கவலையடையச்செய்யும் விடயங்களை விட்டும் என்னை காத்து கொள்வாயாக. யா அல்லாஹ், எனக்கு முன்புறமிருந்தும், எனக்கு பின்புறமிருந்தும் என் வலப்புறமிருந்தும் என் இடப்புறமிருந்தும் எனக்கு மேலிருந்தும் பாதுகாப்பு அளிப்பாயாக. மேலும் என் கீழ்புறமிருந்து நான் தாக்கப்படுவதிலிருந்தோ அல்லது எதிர்பாராத விதமாக கீழ்புறமாக எடுத்து செல்லப்படுவதிலிருந்தோ உன் மகத்துவத்தை கொண்டு பாதுகாப்பு தேடுகிறேன்.

இது காலையில் ஒரு முறையும் மாலையில் ஒரு முறையும் ஓதப்படவேண்டும்.

[[அபூதாவூத் (574) மற்றும் அந்-நவவியால் அல்-அத்காரில் (பக்கம் - 111)உறுதிப்படுத்தப்பட்டுள்ளது ]


COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS

# தடுப்பு நடவடிக்கைகள்

## நடைமுறைக்கேற்ற தற்காப்பு நடவடிக்கைகள்




### 1. நோய் தொற்ற வாய்ப்புடைய எந்த இடத்திற்கும் செல்வதை தவிர்த்தல்



**வீட்டிலேயே தங்கி இருத்தல்**

### 2.மிகவும் அவசிய தேவைகளுக்கேயன்றி வெளியே செல்லாது இருத்தல்


- மிகவும் அவசிய தேவைகளுக்கு வெளியே செல்ல வேண்டியிருப்பின், பயணங்களை முடிந்த வரை குறைத்துக் கொள்ளல்



### 3. சமூக இடைவெளியை கடைபிடித்தல்

'சிங்கத்திடமிருந்து எப்படி வெருன்டோடுவாயோ அப்படி நீ தொழுநோயாளியிடமிருந்து வெருன்டோடு'
[ஸஹீஹ் புகாரி (5707)]


- மற்றவர்களிடம் ஏதேனும் அவசியமான ஒன்றை கொடுக்க வேண்டுமெனின், அதை அவர்களின் வீட்டு வாசலில், அவர்களுடன் எந்த தொடர்பும் கொள்ளாத முறையில் விட்டு செல்லல்.
- வெளியே இருக்கும் போது எப்போதும் 2 மீட்டர் இடைவெளியை பேணல்.




### 4. தொழுநோய் இருக்கும் இடத்துக்கு செல்லவோ,அது பரவும் இடத்திலிருந்து வெளியேறவோ வேண்டாம்.

- அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள் :"அது (தொழுநோய்) ஒரு பிரதேசத்தில் இருப்பதாக கேள்விப்பட்டால், அங்கே நீங்கள் செல்லாதீர்கள். நீங்கள் இருக்கும் பூமியில் அது பரவினால், அதிலிருந்து தப்பி ஓட முனைந்தவராக வெளியேற வேண்டாம்." [[அல்-புகாரி (5739) மற்றும் முஸ்லிம் (2219)]

## நீங்கள் வீட்டைவிட்டு வெளியேறினால்...



**அ.பாதுகாப்பு கவசங்களை அணிந்து, அதை பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்தவும்.**



**ஆ.வாய், கண் மற்றும் மூக்கை தொடுவதை தவிர்க்கவும்.**




**இ.கைகளை பரிசுத்தமாக வைத்திருக்கவும் வீட்டை அடைந்ததும் கைகளை சுத்தப்படுத்தவும்**

COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS

# நோய் அறிகுறிகள் வெளிப்படுதல்


## நோய் அறிகுறிகள் வெளிப்படும் போது எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்



### சுய-தனிமைப்படுத்தல்!

நீங்களோ, உங்கள் நேசத்துக்குறியவர்களோ நோய் அறிகுறிகளை வெளிக்காட்டினால் நோய் பரவுவதை தடுக்க விரைவில் சுயதனிமைப்படுத்துவது மிக அவசியம்.

## சுயதனிமைப்படும் போது செய்யக்கூடியவைகள்...




மேலதிக தொழுகைகளில் ஈடுபடல்



குர்ஆன் ஓதுதல்



நினைவூட்டும் உபதேசங்களை செவிமடுத்தல்.




சுயபரிசோதனை மேற்கொள்ளல்



அல்லாஹ்வை நினைவுகூறல் மற்றும் துஆ செய்தல்



பயன் தரும் புத்தகங்களை வாசித்தல்



குடும்பத்தினரை தொடர்பு கொள்ளல்



உடற்பயிற்சி செய்தல்



ஆன்லைனில் புதிய திறன்களை கற்றுக் கொள்ளல்



நன்கு நீர் அருந்துதல் மற்றும் ஓய்வு எடுத்துக் கொள்ளல்

அல்லாஹ்விடம் முழுமையான நம்பிக்கையை வைத்திருத்தல், சுகாதார நிபுணர்களின் வழிகாட்டல்களின் அடிப்படையில் செயற்படல், அவசர நிலைகளில் பயப்படாமல் உதவிகளை நாடவும்

COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS

# நோய் அறிகுறிகள் வெளிப்படுதல்

## நலவை எதிர்பார்த்தலும் அல்லாஹ்வுடனான நெருக்கத்தை அதிகரித்தலும்

**அது உங்கள் பாவங்களை அழிக்கக்கூடியது!**

நபியவர்கள் கூறினார்கள் :
"... ஒரு அடியான் துன்பங்களால் சோதிக்கப்பட்டுக்கொண்டேயிருப்பார் எதுவரையெனில், அவர் எந்த பாவங்களும் அற்ற நிலையில் பூமியில் நடந்து செல்லும் வரையில் ."

[அத்-திர்மிதி (2398) மற்றும் அவரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது ]

**அல்லாஹ்வின் நேசத்தின் அடையாளம்:**

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :" எவரொருவரை அல்லாஹ் நேசிக்கிறானோ அவரை துன்பங்களை கொண்டு சோதனை செய்வான்

[அத்-திர்மிதி (2396) மற்றும் இப்னு முப்லிஹால் அல்-ஆதாப் அஷ்-ஷரிய்யாஹ் (2/181) இல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது ]]

**ஒருவேலை, சுவனத்தில் அல்லாஹ்வினால் ஒரு விஷேடமான இடம் உங்களுக்குகாத்திருக்க கூடும்**

நபி ﷺ அவர்கள்கூறினார்கள் :" நிச்சயமாக ஒரு அடியானுக்கு அல்லாஹ்விடம் சிறப்பு அந்தஸ்து உள்ளது, எனினும் அவனால் நல்லமல்கள் மூலமாக அதை அடைய முடியாமல் உள்ளது. எனவே அவரை அல்லாஹ் அதை அடையும் வரை அவர் வெறுப்புறும் சோதனைகளால் சோதிக்கப்பட்டுக்கொண்டேயிருப்பார்

[ஸஹீஹ் இப்னு ஹிப்பான்(2908) மற்றும் அல்-ஹைதமியால் அஜ்-ஜவாதிர்(1/164) இல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது ]

**மறுமையில் பலரும் இவ்வுலகில் சோதிக்கப்பட்டிருப்பதை விரும்புவார்கள்**

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் :
" மறுமையில், எவர்கள் பாதுகாப்பாக, ஆரோக்கியமாக மற்றும் நல்ல வாழ்க்கை வாழ்ந்தார்களோ அவர்கள், சோதனைக்குள்ளானவர்களுக்கு கிடைக்கும் மாபெரும் வெகுமதிகளை காணும் போது, தமது தோல் கத்தரி கோலால் வெட்டப்பட்டிருக்கவேண்டுமென விரும்புவார்கள்

[அத்-திர்மிதி மற்றும் அஸ்ஸுயூத்தியால் அல்- ஜாமிஃ அஷ்-ஷகீர் (7721)இல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது ]

COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS

# நோய் அறிகுறிகள் வெளிப்படுதல்

## நபி வழி துஆக்களும் நோயின் போது ஓதப்படும் ருக்கியா

### சூரா பாதிஹாவை ஓதுதல்

சூரா பாதிஹாவானது ஒரு ருக்கியாவாகும்(நிவாரணி)

[ஸஹீஹ் அல்-புஹாரி (2276])

### நோய் குணமடைய ஓதும் துஆ

اللّٰهُمَّ رَبَّ النَّاسِ أَذْهِبِ الْبَاسَ، وَاشْفِ أَنْتَ الشَّافِي، لَا شِفاءَ إِلَّا شِفَاؤُكَ، شِفَاءً لَا يُغَادِرُ سَقَمًا

அல்லாஹும்ம ரப்பனாஸி, அத்ஹிபில் பஃஸ், வஷ்பி(f) அன்தஷ் ஷாபி(f), லா ஷிபா அ இல்லா ஷிபாஉக் ஷிபாஅன் லா யுகாதிரு ஸகமா

வலியை நீக்குவாயாக, இடரை நீக்குவாயாக, மனிதர்களின் எஜமானே! இந்த வலியை குணப்படுத்துவாயாக, நீயே குணப்படுத்துபவன். நீ வழங்கும் சுகத்தை தவிர வேறு எந்த குணப்படுத்தலும் இல்லை. எந்த ஒரு வலியையோ துன்பத்தையோ விட்டு வைக்காமல் முழுமையாக குணப்படுத்துவாயாக

[ஸஹீஹ் அல்-புஹாரி,((5351)

### வலி நிவாரணத்துக்கு ஓதும் துஆ

بِسْمِ اللّٰهِ

பிஸ்மில்லாஹ்

அல்லாஹ்வின் பெயரால், அவனிடம் அவனின் உதவியையும் அவனின் அருளையும் அவனின் பாதுகாப்பையும் வேண்டி நிற்கிறேன்.

குறிப்பு : வலியை உணரும் இடத்தில் உங்கள் கையை வைத்து மேலுல்ல துஆவை மூன்று முறை அரபியில் ஓதுங்கள்.

أَعُوذُ بِاللّٰهِ وَقُدْرَتِهِ مِنْ شَرِّ مَا أَجِدُ وَأُحَاذِرُ

அஊது பில்லாஹி வகுத்ரத்திஹி மின் ஷர்ரி மா அஜிது வ உஹாதிரு

அல்லாஹ்வின் ஆற்றலை கொண்டு நான் உணர்கின்ற மற்றும் அஞ்சுகின்ற இந்த துன்பத்தை விட்டு பாதுகாப்பு தேடுகிறேன்.

குறிப்பு : வலியை உணரும் இடத்தில் உங்கள் கையை வைத்து இந்த துஆவை 7 முறை அரபியில் ஓதவும்.

[ஸஹீஹ் முஸ்லிம், (2202)]

COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS

# நோய் அறிகுறிகள் வெளிப்படுதல்

## நோய் அறிகுறிகளை வெளிக்காட்டுவோருக்கு உதவுதல்

**1.அவர்கள் குணமடைய அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்தல்**

**2 மற்றவர்களையும் அவர்களுக்காக பிரார்த்தனை செய்யுமாறு கேட்டல்***

*அந்-நவவி இது குறித்து ஒருமித்த அனுமதியை குறிப்பிட்டுள்ளார்

[அல்-அத்கார்(பக்கம் 643) இல் அந்-நவவி]

**3 அல்லாஹ் அவர்களை குணப்படுத்துவான் என்ற நல்லெண்ணத்தில் தர்மம் (உணவு, உடை...) வழங்கல்.**

[[ஸஹீஹ் முஸ்லிம் (901)]

**4.உங்களினதும் மற்றவர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டு அவர்களுக்கு உங்களால் முடிந்த எல்லா வகையான உதவிகளையும் செய்தல்**

**5.அவர்களுக்கு நல்ல மனநிலை, நம்பிக்கை மற்றும் முழுமையான நல்லெண்ணத்தையும் வழங்குதல்.**

# நோய் அறிகுறிகள் தீவிரமடையும் போது

## மருத்துவமனைக்கு செல்லும் முன்

### எடுக்கவேண்டிய மூன்று முக்கிய நடவடிக்கைகள்

முழுமையாக தயாராக இருப்பது குறைவாக தயாராக இருப்பதை விட எப்போதும் சிறந்தது. இந்த கட்டத்தில் சரியான முன்னேற்பாடுகளை செய்வது, கவலைகள் ஏதும் இன்றி வீட்டை விட்டு வெளியேறி செல்வதை உறுதிசெய்யும்.

**1. உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு கூறி செல்ல விரும்பும் அறிவுரைகளை கூறுதல்**

**2. முழுமையான பாவமன்னிப்பு கேட்டல் (விரிவான விபரங்களுக்கு அடுத்த பக்கத்தை பார்க்கவும் )**

**3.உங்கள் இஸ்லாமிய உயிலை எழுதுதல் மற்றும் குடும்ப உறுப்பினர்களால் நீங்கள் நிறைவேற்ற விரும்பும் விருப்பங்கள் இருப்பின் அதை அவர்களிடம் பகிர்ந்து கொள்ளல்.**

COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS

# நோய் அறிகுறிகள் தீவிரமடையும் போது முழுமையான பாவமன்னிப்பு (தவ்பா) செய்தல்

## பொதுவான பாவமன்னிப்பு

**பொதுவான பாவமன்னிப்பு தேடுவது , ஒருவர் தனது பாவங்களை தனித்தனியாக நினைவில் வைக்கா விட்டாலும், அவரின் அனைத்து விதமான பாவங்களுக்குமான பாவமன்னிப்பை உறுதிப்படுத்துகிறது. ஏனெனில்**

1. அவர்கள் அப்பாவங்களை நினைவில் வைத்திருந்தால் அவர்கள் அதற்கு பாவமன்னிப்பை வேண்டியிருப்பார்கள்.
2. அவர்களுக்கு அப்பாவங்களின் மீது நாட்டமோ தொடர்போ இல்லை.

**-இப்னு தைமியா**

[அல் ஃபதாவா அல்-குப்ரா(5/279)]]

## பாவமன்னிப்பு இரண்டு பாகங்களை கொண்டது:

### 1)அல்லாஹ்வின் உரிமைகள்

அல்லாஹ்வின் உரிமைகளுக்கான நிபந்தனைகள்

1.அல்லாஹ்விடத்தில் உண்மையாக (இஹ்லாஸாக) இருத்தல்.

STOP 2. பாவத்தை விட்டுவிடல்

3. பாவத்திற்காக வருந்துதல்

4. மீண்டும் பாவத்தை செய்வதில்லை என்ற உறுதியான முடிவில் இருத்தல்.

5. மலகுல் மவ்தை காண்பதற்கு முன்னர்

[அந் நவாவியின் ஷரஹ் முஸ்லிம் (9/20-21),அல்- மதாரிஜ்(1/192) மற்றும் தப்சீர் இப்னு கஸிர் (2/236)]

COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS

# நோய் அறிகுறிகள் தீவிரமடையும் போது
# முழுமையான பாவமன்னிப்பு (தவ்பா) செய்தல்

## 2) படைப்புகளின் உரிமைகள்

முந்தைய பக்கத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்வதோடு பின்வரும் இரண்டு விடயங்களில் எதாவது ஒன்றில் யாருக்கும் நீங்கள் தவறு இழைத்து இருப்பின் அதனையும் நிவர்த்தி
செய்ய வேண்டும்.

### அ. உடமைகள்

- வேறொறுவறுக்கு சொந்தமான ஒன்றை எடுத்திருந்தால் அல்லது இரவல் வாங்கி இருப்பின் அதை அவர்களிடம் திருப்பி ஒப்படைக்க வேண்டும்.
- அந்த பொருள் உங்களிடம் தற்போது இல்லையேல் அதற்கு ஒத்த ஒன்றை வழங்குதல்.
- அப்படியான ஒன்று கிடைக்க வில்லையெனில் அப்பொருளின் தற்போதைய பெறுமதிக்கு சமமான பணத்தை வழங்கல்
- அந்நபர் இறந்து இருப்பின் அவரின் சந்ததிக்கு அதனை வழங்கவும்.
- வாரிசையோ நபரையோ தொடர்பு கொள்ள முடியாவிட்டால், அப்பணத்தை அதன் உரிமையாளரின் பெயரில் (அவர் முஸ்லிமாக இருப்பின்) தர்மம் செய்தல்.
- அவர்கள் முஸ்லிமில்லையெனில், அதனை தர்மம் செய்யவும் (ஆனால் அது அவர்களின் பெயரில் அமைய வேண்டியதில்லை)

### ஆ. மரியாதை

- உடல்ரீதியான சொல்ரிதியான மற்றவர்களுக்கு செய்த எல்லா விதமான தவறுகளுக்கும் நீங்கள் உரிய நபர்களிடம் மன்னிப்பு பெற வேண்டும், உதாரணமாக, சாபமிடல், புறம், அவதூறு, தவறான குற்றச்சாட்டுகள்.
- உரிய நபர்களிடம் நேரடியாக மன்னிப்பு கேட்பது சிறந்தது.
- இருப்பினும், அந்த நபருக்கு துஆ செய்து அல்லாஹ்விடம் அவர்களுக்காக பாவமன்னிப்பு கேட்கவும் முடியும், இது எப்போதெனில்:

  1)நீங்கள் அவர்களுக்கு தவறு இழைத்ததை அவர்கள் அறியாது இருப்பின்/நேரடியாக மன்னிப்பு கேட்பது நன்மையை விட அதிக தீங்கை விளைவிக்கும் என்றால்

  2) அவர்களை தொடர்பு கொள்ள எந்த வழியும் இல்லாத போது
- மெஸேஜ்களை உருவாக்கி அல்லது குரல் பதிவுகளை உருவாக்கி உரிய நபர்களுக்கு அனுப்புவதற்கான ஆயத்தங்களை துரிதமாக செய்தல்.வயதான உங்கள் உறவினர்களுக்கு இவ்வாறான மெஸேஜ்களை நீங்கள் உருவாக்க உதவலாம். மெஸேஜ்க்கான உதாரணம் :" உங்களை பற்றி புறம் பேசி அல்லது தவறாக நினைத்து இருக்கலாம் என நான் நம்புகிறேன், எனவே தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள்.... "

COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS

# நோய் அறிகுறிகள் தீவிரமடையும் போது

## நோயாளியான நிலையில் தொழுதல்

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :" மறுமையில் ஒரு
மனிதனின் முதல் அமலாக விசாரிக்கப்படுவது தொழுகையை பற்றியேயாகும். அது சீராக அமைந்து விடுமேயானால் ஏனைய அனைத்தும் சீராக அமைந்து அவன் வெற்றி பெறுவார்,ஆனால் அது சீரற்றதாக இருப்பின் அவன் அழிந்து போவான்.

[அத் திர்மிதி (413) மற்றும் அந் நவவியின் அல் மஜ்மூ (4/55)]

எனவே இந்த முக்கியமான தருவாயில் ஒருவர் தொழுகையை புறக்கணிக்காமல் இருப்பது மிகவும் அவசியம்

**பின்வருவனவற்றை நீங்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் பையில்  வைத்து இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்....**


- ஸ்மார்ட் போன்(கிப்லா மற்றும் தொழுகை நேரங்கள் அடங்கிய ஆப்பை கொண்டிருத்தல் )

-வயதான நோயாளிர்களுக்கு ஸ்மார்ட் போனை பயன்படுத்தும் விதத்தை கற்றுக் கொடுத்தல் வேண்டும். உதாரணமாக, விடியோ அழைப்புகளை மேற்கொள்வது, போனை சார்ஜ் செய்வது, தொழுகை ஆப்பை பயன்படுத்தும் விதம் போன்றவை.

- தயம்மம் செய்வதற்கான கல்

-பூமியில் இருந்து பெறப்படும் எந்த விதமான கற்களும் இதற்கு போதுமானது

தொழுவதற்கான பாய், கழிப்பறைக்கு தேவையானவை, மேலதிக ஆடைகள், செருப்புகள்



## வுழுவும் தயம்மமும்

உங்களிடம் தண்ணீர் இருப்பின் அல்லது உங்களுக்கு தண்ணீரைப் பெற்று கொள்ள முடியமாக இருப்பின் வுழு செய்யவும்.

நீங்கள் ஆக்சிஜன் மாஸ்கை அணிந்து அதை அகற்ற முடியாது என்றிருந்தால், வுழுவின் போது அதன் மீது தடவுவது போதுமானது.

**உங்களுக்கு பின்வரும் விடயங்களில் ஏதேனும் ஒன்று அல்லது அதிக சிரமங்கள் இருப்பின் தயம்மம்  செய்யவும் :**

- உங்களுக்கு நீரை அனுக முடியாது.
- உங்களுக்கு நீர் ஆதாரத்துக்கு செல்ல முடியாது.
- நீர் பயன்பாடானது உங்கள் நோயை தீவிரமாக்கும் அல்லது குணப்படுத்தலை தாமதப்படுத்தும்.

## தயம்மம் செய்யும் முறை...

1



**தயம்மம் செய்யும் கல்லில் உங்கள் கைகளை தேய்க்கவும்**

2



**பின்னர் உங்கள் முகத்தை தடவவும்**

3



**மீண்டும் தயம்மம் செய்யும் கல்லில் உங்கள் கைகளை தேய்க்கவும்**

4



**பின்னர் இரண்டு கைகளையும் முழங்கை வரை தடவவும். தயம்மம் இப்போது முழுமையானது.**

[அல் பைஹகியின் அஸ்-ஸுனன் அல்-குப்ரா (1/206)]

COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS

# நோய் அறிகுறிகள் தீவிரமடையும் போது

## நோயாளியான நிலையில் தொழுதல்

### எப்படி தொழுவது...

வழமை போல நின்று தொழுதல்

அது உங்களால் முடியாது எனின் உட்கார்ந்து தொழுதல்

உங்களால் உட்கார்ந்து தொழ முடியாது எனில், கிப்லாவை முன்னோக்கி பக்கமாக படுத்து தொழுங்கள்- உங்களுக்கு வசதியான புறத்தில் தொழுது கொள்ளவும். இருபுறமும் வசதியாக இருப்பின், வலது புறம் சிறந்தது.

இதுவும் முடியாவிட்டால், முதுகுப்புறமாக படுத்து தொழுங்கள். (முடியுமானால்) கால்கள் கிப்லாவை முன்னோக்கி அமைத்து கொள்ளுங்கள். இல்லாவிட்டால் எந்த திசையிலும் முதுகுப்புறமாக படுத்து தொழலாம்

### உட்கார்ந்து தொழும் போது ருகூஉ மற்றும் சுஜூத் செய்வது எவ்வாறு...

- முடியுமானால், ருகூஉ மற்றும் சுஜூதுக்காக உங்கள் தலையை முன்னோக்கி சாய்த்து முதுகை வளைக்கவும்.
- உங்களால் முதுகை வளைக்க முடியாவிடின், தலையை மாத்திரம் சாய்ப்பது போதுமானது.

### நீங்கள் படுத்து தொழும் போது ருகூஉ மற்றும் சுஜூத் செய்வது எவ்வாறு...

- ருகூஉ மற்றும் சுஜூதுக்காக உங்கள் தலையை சாய்க்கவும்.
- ருகூஉ மற்றும் சுஜூதுக்கான வேறுபாடு-உட்கார்ந்து மற்றும் படுத்து தொழும் போது, இரண்டு சந்தர்ப்பங்களிலும் சுஜூதுக்காக தலையை ருகூஉவை விட சற்று கூடுதலாக சாய்க்கவும்.

COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS

# நோய் அறிகுறிகள் தீவிரமடையும் போது

## அல்லாஹ்வின் மீது நல்லெண்ணம் வைத்தல்.

இந்த முக்கியமான நேரத்தில் அல்லாஹ்வின் மிது நல்லெண்ணம் வைப்பது மிகவும் அவசியமாகும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :

لَا يَمُوتَنَّ أَحَدُكُمْ إِلَّا وَهُوَ يُحْسِنُ بِاللَّهِ الظَّنَّ

உங்களில் எவரேனும் மரணிக்கும் தருவாயில், அல்லாஹ்வை பற்றிய நல்லெண்ணம் மாத்திரமே கொண்டிருக்கட்டும்.

[[ஸஹீஹ் முஸ்லிம் (2877)]]

அறிஞர்கள் இதற்கு விளக்கம் அளிக்கையில்:" அல்லாஹ்வை பற்றிய நல்லெண்ணம் வைப்பது என்பது, அவன் உங்களுக்கு கருணை காட்டுவான் மற்றும் உங்களை மன்னிப்பான் என்று நினைப்பதாகும்.

[[ஸரஹ் முஸ்லிம் (17/210)]]

## அல்லாஹ்வை பற்றி நல்லெண்ணம் வைக்க உதவும் வழிமுறைகள்

**1. அல்லாஹ்வின் சந்திப்பை விரும்புவதால் கிடைக்கும்  நன்மைகள்**

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் : " யார் அல்லாஹ்வை சந்திக்க  விரும்புகின்றாரோ, அவரை அல்லாஹ்வும் சந்திக்க விரும்புகிறான்."

[[ ஸஹீஹ் அல் புகாரி (6507) மற்றும் ஸஹீஹ் முஸ்லிம் (284)]

**2. இந்த வலியானது முற்றிலுமாக மறந்து விடக்கூடியது.**

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் : "மறுமையில், உலகின் ஆரம்பத்திலிருந்து இறுதி வரையிலுள்ள மனிதர்களில் சோர்வடைந்த, வலி, நோய்கள், அடக்குமுறை, இழிவு, அவமானம் மற்றும் வறுமை என்பவற்றால் கடும் துன்பங்களை சந்தித்த நபர் கொண்டுவரப்பட்டு சுவர்கத்தில் ஒரு முறை போடப்படுவார். பின்னர் அவரிடம்" ஆதமின்  மகனே! நீர் எப்போதாவது சிரமத்தை கண்டிருக்கிறாயா? உனக்கு எப்போதாவது கஷ்டம் ஏற்பட்டுள்ளதா? என கேட்கப்படும்." ,அல்லாஹ் மீது ஆணையாக, இல்லை. என் இறைவா ஒரு போதும் நான் சிரமத்தை கண்டதில்லை. எனக்கு எந்த துன்பமும் ஏற்பட்டதில்லை" என்று கூறுவார்.

[ஸஹீஹ் முஸ்லிம் (2807)]

COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS

# நோய் அறிகுறிகள் தீவிரமடையும் போது

## அல்லாஹ்வை பற்றி நல்லெண்ணம் வைக்க உதவும் வழிமுறைகள்

**3.முழுமையான பாவமன்னிப்பு தேடிய நபரின் பிரிவு மிக அழகானதாகவும் நம்பிக்கை நிறைந்ததாகவும் இருக்கும்.**

நல்லடியார்களாக இருந்த தங்கள் குடும்ப உறுப்பினர்களை அவர்கள் சந்திப்பார்கள். மரணத்துக்கு பின்னர் விசுவாசிகளின் ஆன்மாக்கள் சந்தித்து கொள்கின்றன என்பது நபியின் மரபுகளால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

[ அந்-நஸயி(1833) மற்றும் இப்னு தைமியாவால் அல்-பதாவா (5/449) இல் உறுதிசெய்யப்பட்டுள்ளது. ]]

**4. கப்ரில்**

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: " சுவனவாசியாக இருக்க போகும் விசுவாசியான ஒரு அடியான் ( இறப்பதற்கு முன் முழுமையாக பாவமீட்சி பெற்றவரும் இதில் அடங்குவர்) கப்ரில், சுவனத்தில் தனது இடத்தை தினமும் காலையிலும் மாலையிலும் பார்ப்பார்கள் ".

[ஸஹீஹ் அல்- புகாரி (1379) மற்றும் ஸஹீஹ் முஸ்லிம் (2866)]

**5. கியாம நாளில் பொறுப்பேற்றல்**

நபி ﷺ அவர்கள், தனது குழந்தையை இழந்த ஒரு பெண்ணை கண்டார்கள், அவள் தன் குழந்தையை கண்டெடுத்த போது, கட்டியணைத்து பால் கொடுத்தாள்.'இந்தப் பெண் தனது குழந்தையை நெருப்பில் எறிவாளா?' என அல்லாஹ்வின் தூதர் ﷺ கேட்டார்கள். அதற்கு நாங்கள்,' அல்லாஹ்வின் மிது ஆணையாக இல்லை' என்றோம்'.' இந்தப் பெண் தன் குழந்தைக்கு காட்டும் அன்பபையும் கருணையையும் விட அல்லாஹ் தன் அடியாருக்கு அன்பையும் கருணையையும் காட்டுகிறான்' என்று அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்.

[ஸஹீஹ் அல்-புகாரி (5653) மற்றும் ஸஹீஹ் முஸ்லிம் (6921)]]



COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS

# நோய் அறிகுறிகள் தீவிரமடையும் போது

## அல்லாஹ்வை பற்றி நல்லெண்ணம் வைக்க உதவும் வழிமுறைகள்

**6. மறுமையில் அல்லாஹ்வின் கருணை**

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ்வின் கருணை நூறு பாகங்களை கொண்டது. அதில் ஒன்றை ஜின், மனிதகுலம், மிருகங்கள் மற்றும் ஊர்வன ஆகியவற்றுக்கிடையே இறக்கி வைத்து பங்கிட்டான். இந்த ஒரு பங்கினால் தான் அவை ஒன்றன் மீது ஒன்று பாசம் கொள்கின்றன,பரிவு காட்டுகின்றன.அதன் மூலமே வனவிலங்குகள் தன் குட்டி மீது பாசம் காட்டுகின்றது. மிகுதி தொன்னூற்றி ஒன்பது பாக அன்பை மறுமை நாளில் தன் அடியார்களுக்கு அன்பு காட்டுவதற்காக அதை அல்லாஹ் ஒதுக்கி வைத்துள்ளான்.

[ஸஹீஹ் முஸ்லிம் (6908)]

**7. சுவனத்தில்...**

நபி ﷺ அவர்கள் அறிவித்தார்கள்: " சுவனத்தில் ஒரு அறிவிப்பாளர் சுவனவாசிகளை அழைத்து கூறுவார்கள் ' நீங்கள் ஆரோக்கியத்துடனே இருப்பீர்கள், ஒருபோதும் நோய்வாய்ப்பட மாட்டீர்கள்; நீங்கள் உயிருடன் தான் இருப்பீர்கள், ஒரு போதும் இறக்க மாட்டீர்கள் ; நீங்கள் இளமையாக தான் இருப்பீர்கள், ஒரு போதும் முதுமை அடையமாட்டீர்கள்;நீங்கள் இன்பமாகவே இருப்பீர்கள், ஒருபோதும் துன்பம் அடைய மாட்டீர்கள்.

[[ஸஹீஹ் முஸ்லிம் (2827)]

**8.அவர்கள் பாவமன்னிப்பு மேற்கொண்டு இருந்தும் கூட இன்னும் கவலைப்பட்டால்..**

மரணத்தருவாயில் இருக்கும் ஒரு இளைஞனை நபி ﷺ அவர்கள் சந்திக்க சென்றார்கள். அவரிடம் : நீ எவ்வாறு உணர்கிறாய்? என கேட்டார்கள். அதற்கு அவர் " எனக்கு அல்லாஹ்வின் மீது நம்பிக்கை உள்ளது எனினும் என் பாவங்களை நினைத்து நான் பயப்படுகிறேன்" என்றார்."இந்த இரண்டும் (பயம் மற்றும் நம்பிக்கை) ஒருவரின் உள்ளத்தில் இவ்வாறான கட்டத்தில் ஒன்றினையாது, ஆனாலும் அல்லாஹ் அவன் எதை நம்பிக்கை கொண்டானோ அதை அவனுக்கு கொடுப்பான் அவன் எதை பயப்பட்டானோ அதைவிட்டும் அவனை பாதுகாப்பான்" என அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்"

[அத்-திர்மிதி (983) மற்றும் அத் தர்கீப் வத் தர்ஹிப்(4/214) இல் அல்-முன்திரியால் உறுதிப்படுத்தப்பட்டது]

COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS

# மருத்துவமனையில்

## மருத்துவமனையில் செய்யவேண்டியவைகள்

- பொறுமையை கடைபிடித்தல்
- அல்லாஹ்வை பற்றி நல்லெண்ணம் வைத்தல்
- தொடர்ந்து பாவமன்னிப்பு கேட்டல்
- ஐவேளை தொழுகைகளுக்கு மேலதிகமாக
- தொழுகைகளில் ஈடுபடுதல்

## நீங்கள் நோயிலிருந்து குணமடைந்தால்..

**அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தவும்**

**நன்றிக்கான சுஜூத் செய்தல்(சுஜூத் அஷ்-ஷுக்ர்)**

**மனநிறைவு அடைந்து விடாமல் தொடர்ந்து பிராத்தனைகளில் ஈடுபடுதல்.**

நிலமை சீரடையாமல் இருந்தால், பொறுமையை கடைப்பிடிக்கவும், இந்த பக்கத்தில் மேலே குறிப்பிட்ட விடயங்களை உங்களால் முடிந்தளவு செயற்படுத்துங்கள் மேலும் நோய் தீவிரமடையக்கூடிய நிலமைகளுக்கு உங்களை தயார் படுத்திக்கொள்ளுங்கள்.

## நோய் தீவிரமடைந்த நிலமையில்

## தனிமையாக இருத்தல்

ஒரு முஸ்லிம் ஒரு போதும் தனிமையில் இல்லை என்பதை கவனத்தில் கொள்க. இந்த உலகை விட்டு பிரியும் வரை விசுவாசிகளை காப்பதற்கும் பாதுகாப்பதற்கும் இரண்டு மலக்குமார்கள்( பின்னால் ஒருவரும் முன்னால் ஒருவரும்) நியமிக்கப்பட்டுள்ளனர்.

[[தப்சீர் இப்னு கஸீர் (8/115)]

நபி ﷺ அவர்கள் எங்களுக்கு அறிவித்தார்கள் : மரணத்தருவாயில், பெரிய குழுவாக மலக்குமார்கள் சுவனத்திலிருந்து வெள்ளை நிற கபன் துணியையும் வாசனை திரவியத்தையும் கொண்டு வருவார்கள். 'மலகுல் மவ்த்' விசுவாசியின் தலைக்கருகாமையில் அமர்ந்து ' நல்ல ஆத்மாவே! அல்லாஹ்வின் மன்னிப்பு மற்றும் அவனின் பிரியத்தின் பக்கம் வாருங்கள்' என்று கூறுவார்கள். அந்த ஆத்மா மிகவும் அமைதியான முறையில் வெளியேறும். மலக்குமார்கள் ஆத்மாவை மலக்குல் மவுத்திடம் இருந்து பெற்று சுவனத்திலிருந்து கொண்டுவரப்பட்ட கபனில் வைத்து வாசனை திரவியத்தை அதற்கு இடுவார்கள். அதன் பிறகு,அந்த ஆத்மாவுடன் அவர்கள் வானத்தை நோக்கி செல்வார்கள், வானில் ஆத்மா தனக்கு முன்னர் காலமான அவர்களின் நல்லவர்களாக இருந்த தனது குடும்ப உறுப்பினர்களுடன் ஒன்று சேர்ந்து கொள்வார்கள்.

[ஸஹீஹ் இப்னு ஹிப்பான் மற்றும் இப்னு தைமியாவால் அல் பதாவாவில்(5/449) உறுதிசெய்யப்பட்டது மேலும் அல்-பைஹகியால் ஸுஅப் அல்-ஈமான் (1/300) மற்றும் அவரால் உறுதிசெய்யப்பட்டது]

COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS

# மருத்துவமனையில்
## "லாஇலாஹ இல்லல்லாஹ்" வின் முக்கியத்துவம்

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

( لَقِّنُوا مَوْتَاكُمْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ )

" உங்களில் மரணத்தருவாயில் இருப்பவர்களுக்கு லாஇலாஹ இல்லல்லாஹ்வை(அல்லாஹ்வைத் தவிர உண்மையான இறைவன் வேறு யாரும் இல்லை) கூற சொல்லிக்கொடுங்கள்" [ஸஹீஹ் முஸ்லிம் (916)]]

### உயிர் பிரிவதற்கு முன்னர் லாஇலாஹ இல்லல்லாஹ் கூறுவதன் சிறப்புகள்

ஒரு விசுவாசியின் இறுதி வார்த்தை லாஇலாஹ இல்லல்லாஹ் என்று அமைந்து அவர் தனது பாவங்கள் அனைத்துக்கும் மன்னிப்பு வேண்டுவதாக எண்ணம் கொண்டிருந்த நிலையில் இவ்வார்த்தையை கூறியிருந்தால் அவர் செய்த பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது அவரது வாழ்வின் உன்னதமான முடிவாக அமையும்,அவர் எல்லா வகையான தண்டனைகளிருந்தும் காப்பாற்றப்பட்டு நேரடியாக சுவனத்தினுல் அனுமதிக்கப்படுவார்கள். எவ்வாறயினும், இது ஒருவர் தன்னிடமிருக்கும் மற்றவர்களிடம் கடனாக பெற்ற பணம் மற்றும் அது தவிர்ந்த மற்றவைகளையும் திருப்பி ஒப்படைத்த நிலையிலேயாகும்.

[[அந்-நவியியால் ஸரஹ் முஸ்லிம் (1/220)] மேலும் [ பத்ஹுல் பாரி (3/110) (10/283)]

### "லாஇலாஹ இல்லல்லாஹ்" வை திரும்ப திரும்ப சொல்லிக்கொண்டேயிருக்க வேண்டுமா?

அந்-நவவி கூறியுள்ளார்கள் : அறிஞர்கள் கூறியதாவது :" அவர் ஒரு முறை கூறி அதன் பிறகு அவர் வேறு எதுவும் கூறினாலே தவிர அவருக்கு மீண்டும் நினைவுபடுத்த வேண்டியதில்லை. அவர் வேறு ஏதுவும் கூறி இருந்தால், அவருக்கு மீண்டும் நினைவுபடுத்தப்பட வேண்டும், அதனால் அது அவரின் கடைசி வார்த்தையாக அமையும்.

[[அந்-நவியியால் ஸரஹ் முஸ்லிம் (6/219)]]

அப்துல்லாஹ் இப்னு முபாரக் மரணத்தருவாயில் இருக்கும் போது, ஒரு மனிதர் அவரை "லாஇலாஹ இல்லல்லாஹ் கூறுங்கள்" என தூண்டிக் கொண்டே இருந்தார். அவர் தொந்தரவுக்குள்ளாகும் வரை அந்த நபர் கூறிக்கொண்டேயிருந்தார். "நீங்கள் இவ்வாறு கூறுவது நல்லதல்ல, எனக்கு பிறகு ஒரு முஸ்லிமை நீங்கள் தொந்தரவு செய்யக்கூடும் (நான் உங்களுக்கு அறிவுரை செய்யவில்லையெனில்) என நான் அஞ்சுகிறேன்.நீங்கள் என்னை தூண்டிய போது நான் 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என பதிலளித்து அதன் பிறகு நான் வேறு ஏதும் கூறவில்லையெனில் என்னை திரும்ப தூண்ட வேண்டாம். எனினும் அதன் பிறகு நான் கதைத்தால், அப்போது என்னை தூண்டவும், அதனால் எனது கடைசி வார்த்தை 'லாஇலாஹ இல்லல்லாஹ்' வாக இருக்கும்.

[சீர் அ'லாம் அந்-நுபலா(8/418)]

COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS

# இறப்பை கையாளுதல்

## இழப்பை செவியுரும் போது முதலில் செய்யவேண்டியது

1. பொறுமையை கைகொள்ளல்

**நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:**

إِنَّمَا الصَّبْرُ عِنْدَ الصَّدْمَةِ الْأُولَى

"(உண்மையான) பொறுமை என்பது துன்பம் ஏற்பட்டதும் கைகொள்வதேயாகும்".

[ஸஹீஹ் அல்-புகாரி (1283) ஸஹீஹ் முஸ்லிம் (926)]

**இப்னு ஹஜர் இந்த கூற்றுக்கு விளக்கம் அளிக்கையில்:**
" ஒரு துன்பத்தின் ஆரம்பத்தில், ஒருவர் அதிகமான பீதி மற்றும் பொறுமையின்மையால் அதிகமான கஷ்டத்தை உணர்வதற்கு முன்னர் பொறுமையை கடைபிடிக்க முடியுமாயின், அதுவே நன்மைகளை பெற்றுதரும் சரியான பொறுமையாகும்."

[ஃபத்ஹுல் பாரி(3/149)]

அன்புக்குரியவர்களின் மரண செய்தியை கேள்விபடும் போது, ஒருவர் அல்லாஹ்வின் மீது கோவப்படுவதை தவிர்க்க வேண்டும்.
ஒருவர் செய்யக்கூடாதவைகள்:

- அல்லாஹ்வின் மீதோ அவனின் நாட்டத்தில் அதிருப்தியையோ கோபத்தையோ வெளிக்காட்டல்.
- வார்த்தைகளாகவோ, ஒப்பாரிவைத்து அழுதோ அல்லது நிலமையை கேள்வி எழுப்பியோ அதிருப்தியை வெளிப்படுத்தல்.
- தன் கன்னத்தில் அறைதல், துணிகளை கிழித்தல் அல்லது தலைமுடியை இழுத்தல் போன்ற உடல்ரீதியான செயல்கள் மூலம் அதிருப்தியை வெளிப்படுத்தல்.

மாறாக, ஒருவர் பொறுமையை கடைபிடிக்க வேண்டும்:

- ஒருவர் துன்பங்களால் ஆட்கொள்ளப்படுவதை சுமையாக கருதலாம் மற்றும் அதை வெறுக்கலாம். ஆனால் அவர்கள் அதை பொறுமையுடனும் உறுதியுடனும் தாங்கிகொள்ள வேண்டும்.
- அவர்கள் தாம் எதிர்கொள்ளும் கஷ்டமான நிலையை வெறுக்கலாம், ஆனால் அவர்களின் ஈமான் அவர்களை அதிருப்தி அடையாமல் பாதுகாக்கும்.

COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS

# இறப்பை கையாளுதல்

## இழப்பை செவியுரும் போது முதலில் செய்யவேண்டியது

### 2. பின்வரும் துஆக்களை ஓதவும்

**இழப்பின் போது ஓதும் நபிவழி துஆ**

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ، اللَّهُمَّ أْجُرْنِي فِي مُصِيْبَتِي وَأَخْلِفْ لِيْ خَيْرًا مِنْهَا

இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். அல்லாஹும்மஜுர்னி பி(f)முஸிப(B)தி வ அஹ்லிப்(F)லி ஹைரன் மின்ஹா

நிச்சியமாக, நாங்கள் அல்லாஹ்வுக்குரியவர்கள் மேலும் நாங்கள் அவனிடமே மீளுவோம். யா அல்லாஹ், என் சோதனைக்கு எனக்கு கூலி வழங்கி அதைவிட சிறந்ததை எனக்கு அருள்வாயாக.

அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறக்கேட்டதாக உம்மு சலமா கூறினார்கள். "எந்த ஒரு முஸ்லிமுக்கும் ஒரு சோதனை ஏற்பட்டு அதன் போது அவர் (மேலுல்ல துஆ) இவ்வாறு கூறினால், அதற்கு ஈடாக அதை விட சிறந்ததை அல்லாஹ் அவருக்கு வழங்காமல் இருப்பதில்லை.

[ஸஹீஹ் முஸ்லிம் (918)]

---

**மரணித்தவருக்காக ஓதும் நபிவழி துஆ**

**ஆண்களுக்கு, ஓதவும் :**

اللّٰهُمَّ اغْفِرْ لِ[அவரின் பெயரை கூறவும்]

وَارْفَعْ دَرَجَتَهُ فِي الْمَهْدِيِّيْنَ، وَاخْلُفْهُ فِيْ عَقِبِهِ فِيْ الْغَابِرِيْنَ، وَاغْفِرْ لَنَا وَلَهُ يَا رَبَّ الْعَالَمِينَ،

وَافْسَحْ لَهُ فِي قَبْرِهِ، وَنَوِّرْ لَهُ فِيهِ

அல்லாஹும்ம ஃபி*(F)*ர்லி- *(*மரணித்த ஆணின் பெயரை கூறவும்)-வர்பஃ தரஜ*(த்)* தஹூ ஃபில் மஹ்திய்யின், வஃக்லுஃப்ஹு ஃபீ அகிபிஹி ஃபில் காஃபிரீன், வக்ஃபிர் லனா வலஹு யாரப்பல் ஆலமீன், வப்*(F)*ஸஹ் லஹு பீ*(F)* கப்ரிஹ் வநவ்விர் லஹு பீ*(F)*ஹி

**பெண்களுக்கு, ஓதவும்*:***

اللّٰهُمَّ اغْفِرْ لِ[அவரின் பெயரை கூறவும்]

وَارْفَعْ دَرَجَتَهَا فِي الْمَهْدِيِّينَ، وَاخْلُفْهَا فِي عَقِبِهَا فِي الْغَابِرِينَ، وَاغْفِرْ لَنَا وَلَهَا يَا رَبَّ الْعَالَمِينَ،

وَافْسَحْ لَهَا فِي قَبْرِهَا، وَنَوِّرْ لَهَا فِيهِ

அல்லாஹும்ம ஃபி*(F)*ர்லி- *(*மரணித்த பெண்ணின் பெயரை கூறவும்*)*-வர்பஃ தரஜ*(த்)* தஹா ஃபில் மஹ்திய்யின், வஃக்லுஃப்ஹா ஃபீ அகிபிஹா ஃபில் காஃபிரீன், வக்ஃபிர் லனா வலஹா யாரப்பல் ஆலமீன், வப்*(F)*ஸஹ் லஹா பீ*(F)* கப்ரிஹா வநவ்விர் லஹா பீ*(F)*ஹ்

" யா அல்லாஹ்! இந்த நபரை மன்னிப்பாயாக;நேர்வழி பெற்றவர்களுடன் இவரது தகுதியை உயர்த்துவாயாக;இவர் விட்டு சென்ற இவரின் குடும்பத்தை கவனித்துகொள்வாயாக. அகிலத்தின் அதிபதியே! இவரையும் எங்களையும் மன்னிப்பாயாக, இவரது மண்ணரையை விசாலமாக்குவாயாக மேலும் அதில் இவருக்கு ஒளியை ஏற்படுத்துவாயாக. "

[ஸஹீஹ் முஸ்லிம் (920)]

COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS

# இறப்பை கையாளுதல்

## இழப்பை செவியுறும் போது முதலில் செய்யவேண்டியது

### 3. அவர்களுக்காக பாவமன்னிப்பு கோருதல்

**பெற்றோருக்கும் மற்றவர்களுக்கும் பாவமன்னிப்பு கோருதல்.**

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் : ஒருவர் சுவனத்தில் அந்தஸ்த்தில் உயர்த்தப்படுவார். அப்போது அவர்" இது எங்கிருந்து வந்தது? என கேட்பார். "உங்கள் பிள்ளைகள் உங்களுக்காக பாவமன்னிப்பு கோரியது" எனக் கூறப்படும்.

[[இப்னு மாஜா(3660) மற்றும் இப்னு கஸிரினால் அவரின் தப்ஸீரில் (7/409)உறுதிப்படுபுபட்டுள்ளது]]

**நீங்கள் அவர்களுக்கு பிழை எதுவும் செய்து இருப்பதாக குற்ற உணர்ச்சியுடன் இருப்பின்...**

**இப்னு தைமியா கூறினார்கள் :**

"ஒரு அடியான் தன் குடும்ப உறுப்பினர்கள் பிள்ளைகள், அயலவர்கள் அல்லது உடன்பிறப்புகள் விடயத்தில் குறை எதுவும் வைத்திருப்பின் அவர்களுக்காக துஆ பிராத்தனை மற்றும் பாவமன்னிப்பு கேட்கவேண்டும்."

[[மஜ்மூ அல் ஃபதாவா(11/698)]]

### 4. அவர்களின் பெயரில் தர்மம் செய்தல்

மரணித்தவர்களின் சார்பாக தர்மம் செய்வது அவர்களுக்கு பயனளிக்கும் என்று அறிஞர்கள் ஒருமித்த கருத்தை கொண்டுள்ளனர்.

[[அந்-நவியியால் ஸரஹ் முஸ்லிம்(4/70)]]

நிரந்தர தர்மமாக அமையும் வகையில் தர்மம் செய்வது அவர்களுக்கு மிகவும் சிறந்தது. நிரந்தர தர்மமாக அமைபவை: மஸ்ஜித், கிணறுகள், நீர் வசதிகள் என்பவற்றை அமைத்துக் கொடுத்தல், மேலும் பல.நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களிடமிருந்து பணம் சேகரிக்க ஆன்லைனில் அதற்காக ஒரு பக்கத்தை உருவாக்கலாம். பல தொண்டு நிறுவனங்கள் இவற்றை உங்கள் சார்பாக அமைத்து தருவார்கள்.

COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS


# இறப்பை கையாளுதல்

## இழப்பை கையாளுவதற்கு மற்றவர்களுக்கு உதவுதல்




**1.அவர்களுக்கு வருத்தம் தெரிவிப்பதும் ஆறுதல் அளிப்பதும்**

சமூக இடைவெளிக்கான வழிகாட்டல்களை தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்தல்



**2. மரணித்தவருக்காக துஆ செய்தல்**




**3.இந்த கடினமான நேரத்தில் அவர்களுக்கு உதவுதல்**

- நிதி உதவிகள், அடக்கம் செய்வதற்கான செலவுகள் அல்லது வேறு தேவைகளுக்கு நீங்கள் உதவலாம்.
- கவனிப்பதன் மூலமும் ஆறுதல் அளிப்பதன் மூலமும் உளரீதியாக ஆறுதல் அடைய உதவுதல்.




சுமை(நெருக்கடி)களை தவிர்க்க உதவுதல்.



**4. அவர்கள் சார்பாக தர்மம் செய்தல்**

[[அந் நவவி யின் ஸரஹ் முஸ்லிம்(4/70)]



**5.அவர்களுக்கு உணவுக்கான ஏற்பாடுகளை செய்தல்**

- அவர்களுக்கு வசதியான நேரத்தில் அவர்களின் அனுமதியுடன் இதை மேற்கொள்ளல்.
- மரணித்தவரின் விட்டிற்கு உணவு வழங்குவது நபியவர்களால் ﷺ ஊக்குவிக்கபட்ட ஓர் நடைமுறையாகும். [ அத் திர்மிதி (998) மேலும் அவரால் உறுதிபடுத்தப்பட்டது]

COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS 

# ஜனாஸாவின் கடமைகள்

**இப்னு குதாமா கூறினார்கள் :**

" கொலை செய்யப்படாத ஆனால் உயிர்தியாகியின் நன்மையை பெற்றவர்களான, வயிற்று நோயால் இறந்தவர்கள், பிளேக் நோயினால் இறந்தவர்கள், நீரில் மூழ்கி இறந்தவர்கள், இடிந்து விழுந்த சுவர்களில் நசுக்கப்பட்டு இறந்தவர்கள், பிரசவத்தின் போது உயிரிழந்த பெண் ஆகியோர் குளிப்பாட்டப்பட்டு ஜனாஸா தொழுகை நடத்தப்படவேண்டும். இவ் விடயத்தில் அறிஞர்கள் மத்தியில் கருத்து முரண்பாடு இருப்பதை நாம் அறியமாட்டோம். "

[[அல் முஃகனி (2/204))]

## ஜனாஸாவை குளிப்பாட்டல்*

- உடலின் எல்லா பகுதிகளும் நீரால் நனைக்கப்படுவதே குளிப்பாட்டப்படுவதின் குறைந்த பட்ச அளவாகும்.

[அல்-மப்சூத்(2/229),அல்-பவாக்கிஹ் அத்-தாஸானி(2/668),துஹ்பதுல் முஹ்தாஜ்(3/98) மற்றும் கஷ்ஃப் அல்-கின்னா(2/93)]

- ஜனாஸாவை குளிப்பாட்டப்படுவதனால் மக்களுக்கு நோய்தொற்றலாம் என்ற அச்சம் இருப்பின், ஒழுங்கான பாதுகாப்பு கவசங்களை அணிந்த நிலையில் மிகவும் கவனமாக குளிப்பாட்டுதல் வேண்டும்.
- உடலை குளிப்பாட்ட முடியாவிடில், மண் அல்லது கல்லை கொண்டு தயமம் செய்யவேண்டும்.

## கபனிடல்*

- ஒரு துண்டு துணியால் உடல் முழுவதையும் மறைப்பதே கபனின் குறைந்தளவு ஆகும்.

[[ஸஹீஹ் அல்-புகாரி (4047),ஸஹீஹ் முஸ்லிம் (940),ஹாஷியா இப்ன் 'ஆபிதீன்(3/98));மாவாஹிப் அல்-ஜலீல்(2/266);மற்றும் அல் முஃனி(3/386)]

- கபனிடுவதற்கு போதுமான துணி இல்லாவிடின், முடிந்தவரை உடலை மூடுதல் வேண்டும், மறைவிடம் மூடப்பட்டிருப்பதை உறுதிசெய்து கொள்க.

* குறிப்பு: உங்கள் உள்ளூர் இறுதி சடங்கு சேவைகளுக்கேற்ப குளிப்பாட்டுதல் மற்றும் கபனிடும் நடைமுறைகள் வேறுபடலாம். தயவு செய்து பாதுகாப்பு வழிகாட்டுதல்களை பின்பற்றுவதோடு மார்க்க கடமைகளையும் சரியாக செய்யவும்.


COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS

# ஜனாஸாவின் கடமைகள்

## ஜனாஸா தொழுகை

### எவ்வாறு ஜனாஸா தொழுகையை நிறைவேற்றுவது

1. நிலையில் நிற்றல் மேலும் "அல்லாஹு அக்பர்" என கூறுதல்.
2. பின்னர் சூரா பாதிஹா ஓதுதல் அல்லது இஸ்திப்தா அல்லது ஸனா எனப்படும் தொழுகையின் தொடக்க துஆவை ஓதுதல்.
3. பின்னர் இரண்டாவது தடவையாக "அல்லாஹு அக்பர் " என்று கூறுதல்.
4. அதை தொடர்ந்து அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மது (இப்றாஹிமியா/ துரூட் ஷரீப்) ஓதுதல்.
5. பின்னர் மூன்றாவது தடவையாக "அல்லாஹு அக்பர்" கூறுதல்
6. பின்னர் பின்வரும் நபி வழி துஆவை ஓதுதல்.



**ஆண்களுக்கு :**

اللّٰهُمَّ اغْفِرْ لَهُ وَارْحَمْهُ، وَعَافِهِ وَاعْفُ عَنْهُ ، وَأَكْرِمْ نُزُلَهُ ، وَوَسِّعْ مُدْخَلَهُ ، وَاغْسِلْهُ بِالْمَاءِ وَالثَّلْجِ وَالْبَرَدِ، وَنَقِّهِ مِنَ الْخطَايَا كَمَا نَقَّيْتَ الثَّوْبَ الْأَبْيَضَ مِنَ الدَّنَسِ ، وَأَبْدِلْهُ دَارًا خَيْرًا مِنْ دَارِهِ ، وَأَهْلًا خَيْرًا مِنْ أَهْلِهِ، وَزَوْجًا خَيْرًا مِنْ زَوْجِهِ، وَأَدْخِلْهُ الْجَنَّةَ ، وَأَعِذْهُ مِنْ عَذَابِ الْقَبْرِ وَ عَذَابِ النَّارِ

அல்லாஹும்மஃ பிர்லஹு, வர்ஹம்ஹு, வஆபிஹி வஃபு அன்ஹு, வஅக்ரிம் நுஸு(z) லஹு, வ வஸ்ஸஃ முத்ஹலஹு, வஃஸில்ஹு பி(B)ல் மாஇ வஸ்ஸல்ஜி வல் பரதி, வ நக்கிஹி மினல் கதாயா கமா நக்கைய்த ஸவ்பல் அப்யழ் மினந்தனஸ், வ அப்தில்ஹு தாரன் கைரன் மின் தாரிஹி, வ அஹ்லன் கைரன் மின் அஹ்லிஹி, வ ஸவ்ஜன் கைரன் மின் ஸவ்ஜிஹி வஅத்ஹில்ஹு ஜன்னத்த, வ அஈதுஹு மின் அதாபில் கப்ரி வ அதாபின் நார்.

[ஸஹீஹ் முஸ்லிம் (963)]

**பெண்களுக்கு :**

اَللّٰهُمَّ اغْفِرْ لَهَا وَارْحَمْهَا ، وَعَافِهَا وَاعْفُ عَنْهَا،وَأَكْرِمْ نُزُلَهَا، وَوَسِّعْ مُدْخَلَهَا، وَاغْسِلْهَا بِالْمَاءِ وَالثَّلْجِ وَالْبَرَدِ، وَنَقِّهَا مِنَ الْخَطَايَا كَمَا نَقَّيْتَ الثَّوْبَ الْأَبْيَضَ مِنَ الدَّنَسِ ، وَأَبْدِلْهَا دَارًا خَيْرًا مِنْ دَارِهَا ، وَأَهْلًا خَيْرًا مِنْ أَهْلِهَا، وَزَوْجًا خَيْرًا مِنْ زَوْجِهَا، وَأَدْخِلْهَا الْجَنَّةَ ، وَأَعِذْهَا مِنْ عَذَابِ الْقَبْرِ وَعَذَابِ النَّارِ

அல்லாஹும்மஃ பிர்லஹா, வர்ஹம்ஹா, வஆபிஹி வஃபு அன்ஹா, வஅக்ரிம் நுஸு(z) லஹா, வ வஸ்ஸஃ முத்ஹலஹா, வஃஸில்ஹா பி(B)ல் மாஇ வஸ்ஸல்ஜி வல் பரதி, வ நக்கிஹா மினல் கதாயா கமா நக்கைய்த ஸவ்பல் அப்யழ் மினந்தனஸ், வ அப்தில்ஹா தாரன் கைரன் மின் தாரிஹா, வ அஹ்லன் கைரன் மின் அஹ்லிஹா, வ ஸவ்ஜன் கைரன் மின் ஸவ்ஜிஹா வஅத்ஹில்ஹால் ஜன்னத்த, வ அஈதுஹா மின் அதாபில் கப்ரி வ அதாபின் நார். [ஸஹீஹ் முஸ்லிம் (963)]

COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS

# ஜனாஸாவின் கடமைகள்

## ஜனாஸா தொழுகை

**ஜனாஸா துஆவின் மொழிபெயர்ப்பு:**

"யா அல்லாஹ், இவரை மன்னிப்பாயாக இவருக்கு அருள்புரிவாயாக மேலும் இவருக்கு பாதுகாப்பு அளித்து இவரை மன்னிப்பாயாக. இவருடன் தாராளத்தன்மையாக நடந்து இவரின் தங்குமிடத்தை விசாலமாக்குவாயாக மேலும் இவரை தண்ணீராலும், பனிக்கட்டியாலும், ஆலங்கட்டியாலும் கழுவுவாயாக. வெள்ளை ஆடையை அழுக்கிலிருந்து சுத்தம் செய்வதை போல் இவரை குற்றங்களிலிருந்து சுத்தம் செய்வாயாக, அவரின் வீட்டை விட சிறந்த தங்குமிடைத்தையும் அவரின் குடும்பத்தை விட சிறந்த குடும்பத்தையும், அவரின் வாழ்க்கை துணையை விட சிறந்த துணையையும் வழங்குவாயாக, இவரை சுவர்கத்தில் நுழைவிக்க செய்து கப்ருடைய வேதனையை விட்டும் நரக நெருப்பின் தண்டனையிலிருந்தும் பாதுகாப்பாயாக."

[ஸஹீஹ் முஸ்லிம் (963)]

7. பின்னர் "அல்லாஹு அக்பர்" என நான்காவது முறையாக கூறவும்.

[முஸ்னத் அஷ்-ஷாபிஈ(588) மற்றும் அஸ்-ஸுனன் அல்-குப்ராவில் அல்-பைஹகி யால் உறுதிசெய்யப்பட்டது(4/39)]

8. பின்னர் வலது பக்கம் திரும்பி "அஸ்ஸலாமு அலைக்கும் வர்ஹமதுல்லாஹ்" என ஒரு முறை கூறவும். இடது பக்கமும் ஒரு முறை திரும்பி தொழுகையை முடித்துக்கொள்ளலாம்.

**ஜனாஸா தொழுகை சம்பந்தமான மேலும் சில குறிப்புகள்.**

- மையவாடியில் ஜனாஸா தொழுகையை நிறைவேற்ற முடியும்.
- ஜனாஸா தொழுகையை நிறைவேற்ற குறைந்த பட்சம் மக்கள் தொகை, ஒரு முஸ்லிமாகும். [பதுஹுல் முன்'ஈம்(4/243)
- முகக் கவசத்தை அணிந்த நிலையில் ஜனாஸா தொழுகையை நிறைவேற்றலாம்.
- இவ்வாறான நோய் பரவும் காலப்பகுதியில் தொழுகையாளிகளிடையே இடைவெளி விட்டு இருப்பது அனுமதிக்கப்பட்டது
- நபியவர்களின் ஒரு கூற்று கூறுவதாவது: ஒரு முஸ்லிம் இறந்ததும், அல்லாஹ்வுக்கு இணைவைக்காத நாற்பது நபர்கள் அவருக்காக ஜனாஸா தொழுகையை நிறைவேற்றினால் அல்லாஹ் அவர்களுக்கு மறுமையில் அவருக்காக பரிந்துரை செய்ய அனுமதிப்பான்,(அதாவது, அவர்களின் துஆவை அங்கிகரிப்பான் மேலும் மரணித்தவரை மன்னிப்பான்). [ஸஹீஹ் முஸ்லிம்) 948)]
- இருப்பினும் தற்போதைய விதிமுறைகளுகமைய நாற்பது நபர்கள் கலந்து கொள்ள முடியாவிட்டாலும், இக் காலகட்டத்தில் அனுமதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கையுடன் இந்த நன்மைகளை பெறுவார் என நம்பப்படுகிறது.
- தனிமைப்படுத்தல் மற்றும் பிற கட்டுப்பாடுகளால் உடலை முன்வைத்து ஜனாஸா தொழுகையை நிறைவேற்ற முடியா விட்டால், மேலும் யாரும் ஜனாஸா தொழுகையை நிறையவேற்ற வில்லையெனில், அவருக்கு உடல் இல்லாத நிலையிலும் ஜனாஸா தொழுகையை நிறையவேற்றலாம் என பல முற்கால அறிஞர்கள் அனுமதி வழங்கி உள்ளனர். .[ஸஹீஹ் அல்-புகாரி(3877) மற்றும் ஸஹீஹ் முஸ்லிம் (952)]

COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS

# ஜனாஸாவின் கடமைகள்

## அடக்கம் செய்தல்

- ஜனாஸவை அடக்கம் செய்ய குறைந்தது எத்தனை நபர்கள் இருக்க வேண்டும் என்ற அவசியம் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் இல்லை. எனவே ஜனாஸா அடக்கம் செய்யப்படுமிடத்து, அந்த கடமை நீங்கி விடும். [அல்-இஜ்மா வில் இப்னு முன்திர்(ப. 52)]
- தேவையேற்படின் ஒரே கப்ரில் பல உடல்களை அடக்கம் செய்வது அனுமதிக்கப்பட்டதே.நபி ﷺ அவர்கள் தேவைகள் ஏற்பட்ட போது இவ்வாறு செய்தார்கள் என்பதற்கு உதாரணங்கள் உள்ளன. எனவே இது மையவாடியில் நடப்பதை கண்டால், அனுமதிக்கப்பட்டது என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

[அல்-மஜ்மூ வில் அந்-நவவியால்(5/247) மற்றும் ஸஹீஹ் அல்-புகாரி(1343)]

- சவப்பெட்டியில் வைத்து அடக்கம் செய்வது விரும்பத்தக்க செயலல்ல என்பது அறிஞர்களின் ஒருமித்த கருத்தாகும். எனினும் தேவைகளின் போது இவ்வாறு செய்வது அனுமதிக்கப்பட்டது.[[அல் முஃனி அல்-முஹ்தஜ்(1/539)]
- உடலை கப்ரில் வலப்புறமாக கிப்லாவை முன்னோக்கியவண்ணமாக வைக்கப்படல் வேண்டும். [அல்-முஹாலா வில் இப்னு ஹஸம்(5/173)]

## அடக்கம் செய்த பின்னர்

- நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :"உங்கள் சகோதரருக்கு மன்னிப்பு கோருங்கள், மேலும் அவர் உறுதியாக இருக்கவும்(இரு மலக்குமார்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க) அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள் இப்போது அவர்கள் விசாரிக்கப்பட்ட கொண்டிருக்கிறார்.

[அபூ தாவுத்(3221) மற்றும் அந்-நவவியின் அல் மஜ்மூ வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது(5/291)]

- அத்-திர்மிதி கூறினார்கள் :" ஜனாஸா தொழுகை மற்றும் ஜனாஸாவுக்கு அடக்கம் செய்த பின்னர் செய்யும் பிரார்த்தனை என்பன அவருக்கு வழங்கும் ஓர் ஆதரவாகும்,முஸ்லிம்களின் ஒரு குழு ஜனாஸா தொழுகையில் ஈடுபடுவதென்பது, அரசின் கதவுக்கு முன்னால் சென்று அவருக்கு சிபாரிசு செய்யும் வீரர்களை அனுப்புவது போன்றதாகும். பின்னர் அவருக்கு கப்ரில் நின்று அவருக்கு உறுதியளிக்குமாறு துஆ கேட்பது என்பது, மேலும் ஆதரவளிப்பது போலாகும். எனெனில் இத்தருணமே இறந்தவர் ஆக்கிரமிக்கப்பட்டு,அந்த நேரத்தின் பீதியையும் மலக்குமார்களின் கேள்விகளையும் எதிர்கொள்கிறார். [ இப்னு காஸிம் ஆல் ஹாஷியாத் அற்-றவ்த்(3/124)])

COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS

# அடக்கம் செய்த பின்னர்

## மையவாடியை தரிசித்தல்

### மையவாடியை தரிசிக்கும் போது ஓதும் நபிவழி துஆ

السَّلَامُ عَلَيْكُمْ أَهْلَ الدِّيَارِ مِنَ الْمُؤْمِنِينَ وَالْمُسْلِمِينَ ، وَإِنَّا إِنْ شَاءَ اللّٰهُ بِكُمْ لَلَاحِقُونَ،
وَيَرْحَمُ اللّٰهُ الْمُسْتَقْدِمِيْنَ مِنَّا وَالْمُسْتَأْخِرِيْنَ، أَسْأَلُ اللّٰهَ لَنَا وَلَكُمُ الْعَافِيَةَ

அஸ்ஸலாமு அலைக்கும் அஹ்லத் தியாரி மினல் முஃமினீன வல் முஸ்லிமீன், வ இன்னா இன்ஷா அல்லாஹு பிகும் லாஹிகூன், வ யர்ஹமுல்லாஹுல் முஸ்தக்திமீன மின்னா வல் முஸ்த' ஹ்ஹிரீன், அஸ் அலுல்லாஹ லனா வ லகும் ஆபிய்யா

அஸ்ஸலாமு அலைக்கும், முஃமினான முஸ்லிமான கப்ர் வாசிகளே, இன்ஷா அல்லாஹ் நிச்சயமாக, நாங்களும் உங்களுடன் வந்து இணைவோம். முன்னதாக சென்றோருக்கும் பின்னால் வரக்கூடியவர்களுக்கும் அல்லாஹ் கருணை காட்டுவானாக. நம் அனைவருக்கும் நல்வாழ்வையும் பாதுகாப்பையும் வழங்குமாறு அல்லாஹ்விடம் நான் வேண்டுகிறேன்.

[ஸஹீஹ் முஸ்லிம் (974) மற்றும் (975)]

"அஸ்ஸலாமு அலைக்கும்" என்று இங்கு கூறப்படுவது, கப்ரில் இருப்போருக்கு கப்ர் வேதனையிலிருந்து பாதுகாப்பு வழங்குவதை குறிக்கிறது. ஏனெனில் ஒரு மனிதர் கப்ரில் சிறிதளவேனும் வேதனை செய்யப்படலாம். எனவே நீங்கள் அவருக்கு அல்லாஹ்விடம் பாதுகாப்பு கேட்கும் போது அவர் பாதுகாக்கப்படுவார். [ஸரஹ் அல்-மும்தி(5/259)]

# முடிவுரை

இறுதி பகுதியை அடைந்ததற்கு ஜஸாக்கல்லாஹு ஹய்ரன். இந்த கையேட்டின் உள்ளடக்கம் உங்களுக்கும் உங்கள் அன்புக்குறியவர்களுக்கும் பயன் தரவேண்டும் என நாம் பிரார்த்திக்கிறோம். இந்த கையேட்டிலுள்ள விடயங்கள் சம்பந்தமான உங்கள் கருத்துகள், திருத்தங்கள் அல்லது கேள்விகள் எதுவும் இருப்பின், *info@spiritualantidote.com* என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும். உங்கள் கருத்துக்களை நாம் ஆவலுடன் எதிர்பர்க்கிறோம். உங்களது வேண்டுதலுக்கமைய இந்த கையேட்டின் அச்சிடப்பட்ட பிரதிகளை எம்மால் வழங்க முடியும்.

உங்களையும் உங்கள் குடும்பத்தையும் இந்த நேரத்தில் பாதுகாக்குமாறு அல்லாஹ்விடம் வேண்டுகிறேன். மரணித்த அனைவருக்கும் அல்லாஹ் கருணை காட்டி அவர்களை சுவனத்தில் நுழையச்செய்வானாக. நம் அனைவரதும் பிழைகளை அல்லாஹ் மன்னித்து, இந்த சோதனையின் மூலம் அல்லாஹ்வின் நெருக்கத்தையும் இன்பத்தையும் பெற்றுத்தருவானாக. ஆமீன்.

COPYRIGHT © 2020 SPIRITUAL ANTIDOTE PUBLICATIONS